செய்தி வெளியீடு எண்.629 நாள்.5.8.2008

நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை
பத்திரிகைச் செய்திக்கான விளக்கக் குறிப்பு

ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதில் பழைய நடைமுறையின்படி, பல்வேறு பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரி அறிவிப்பு வெளியிட்டபின், ஒப்பந்தப்புள்ளிகளுக்கான படிவங்களை தக்க கட்டணம் செலுத்தி ஒப்பந்ததாரர்கள் சம்பந்தப்பட்ட அலுவலகங்களிலிருந்து பெற்று ஒப்பந்தப்புள்ளிகளை சமர்ப்பித்து வந்தார்கள். அதனடிப்படையில், ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கான கடைசித் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு குறைந்தபட்ச விலையின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்யப்பட்டு வந்தன.

இந்த நடைமுறையில் சில பகுதிகளில் ஒப்பந்ததாரர்கள் சிலருக்கு ஒப்பந்தப் படிவங்கள் கிடைப்பதில்லை என்ற புகார் அவ்வப்போது அரசுக்கு வந்தது. அதனைத் தொடர்ந்து அரசு புதிய நடைமுறையை (e-tendering) 01.07.2007 முதல் அறிமுகம் செய்தது. அதன்படி, ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் பல்வேறு பணிகளுக்கு ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளிக்கான படிவங்களை கணினி (computer) மூலம் கட்டணமின்றி நகலெடுத்து (download) அதைப் பூர்த்தி செய்து சமர்ப்பிக்கும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது; ஆனால், அதேசமயத்தில், பழைய முறைப்படி ஒப்பந்தப் படிவங்களை நேரிலும் பெற்றுக் கொள்ள விரும்பும் ஒப்பந்ததாரர்கள் அதற்கான கட்டணத்தை அலுவலகத்தில் செலுத்தி படிவங்களை பெற்றுக் கொண்டும் ஒப்பந்தப்புள்ளியில் (tender) கலந்து கொள்ளலாம் என்ற முறையும் தொடர்ந்து கடைபிடிக்கப்பட்டு வருகிறது. எனவே, துறையிலிருந்து நேரடியாக படிவங்கள் பெறுபவர்களிடம் மட்டும் ஒப்பந்தப்புள்ளிகளுக்கான கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இதில் எவ்வித குறைபாடுகளோ, முறைகேடுகளோ ஏற்படுவதில்லை.

மேலும், ஒப்பந்தப்புள்ளிகளுக்கான படிவங்களை கணினி மூலமாக நகலெடுத்துக் கொண்டாலும், அலுவலகங்களிலிருந்து நேரடியாக பெற்றுக் கொண்டாலும் ஒப்பந்தப் படிவங்களை சமர்ப்பிப்பவர்கள் முன்வைப்புத் தொகை (Earnest Money Deposit) அவசியம் செலுத்த வேண்டுமென்ற நிபந்தனை தொடர்ந்து கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இதில் எந்தவித மாற்றமும் செய்யப்படவில்லை. எனவே முன்வைப்புத் தொகை பெறாமலே பலருக்கு வேலை வழங்கப்படுகிறது என மாலைப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள செய்தி முற்றிலும் தவறானதும், உண்மைக்குப் புறம்பானதுமாகும்.

03.08.08 அன்று இச்செய்தியை வெளியிட்டுள்ள பத்திரிகையின் அதே பக்கத்தில் நெடுஞ்சாலைத் துறை தொடர்பான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பும் வெளியாகியுள்ளது. அதில், முன்வைப்புத் தொகை செலுத்தப்பட வேண்டுமென்ற விவரம் தெளிவாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, முன்வைப்புத் தொகை பெறாமல் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படுகின்றன என்பதும் சரியல்ல.

தவிர, ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளிகளை துறைக்கு சமர்ப்பித்தபின்னர் முறையான காரணங்களின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளிகள் அடங்கிய உறையினைத் திறக்கும் முன்பாகவே தாங்கள் சமர்ப்பித்த ஒப்பந்தப்புள்ளிகளை திரும்பப் பெற்றுக்கொள்ளலாம் என்று அரசு விதிமுறை ஏற்கனவே உள்ளன. அதே நடைமுறை தற்போதும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இதிலும் எவ்வித தவறும், முறைகேடும் ஏற்படவில்லை.

எனவே, தவறான தகவல்களின் அடிப்படையில் இந்த செய்தி வெளியிடப்பட்டுள்ளது. உண்மை நிலையை தெளிவுபடுத்தும்வகையில், இந்த விளக்கத்தினை வெளியிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தலைமைப் பொறியாளர் (பொது)
நெடுஞ்சாலைத் துறை.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.